(வலைபின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதல்களை ஒடுக்குவதற்கான சட்டம்

---

*(1999 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*1999, மே மாதம் 28 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

**விலை : ரூபா 10.25** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதல்களை ஒடுக்குவதற்கான சட்டம்**

[*1999 மே மாதம் 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.*]

*ச.வ.-ஓ.17/98*

**பயங்கரவாத குண்டுத்தாக்குதல்களை ஒடுக்குவதற்கான சமவாயத்தைப் பயனுறுத்துவதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கரு மங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்**

*பயங்கரவாத குண்டுத்தாக்குதல்களை ஒடுக்குவதற்கான சமவாயமொன்று ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையால் ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றேழாம் ஆண்டு திசெம்பர் மாதம் பதினைந்தாம் திகதியன்று ஏற்றங்கீகரிக்கப்பட்டு ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு சனவரி மாதம் பன்னிரெண்டாம் திகதியன்று நியூயோர்க்கில் கையொப்பத்திற்குத் திறந்துவைக்கப்பட்டதாதலாலும் :*

*அத்துடன், இலங்கை அரசாங்கம் ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டு சனவரி மாதம் பன்னிரெண்டாம் திகதியன்று மேற்கூறப்பட்ட சமவாயத்திற்குக் கையொப்பமிட்ட நாடொன்றானது ஆதலாலும் ;*

*அத்துடன் மேற்கூறப்பட்ட சமவாயத்தை உறுதிப்படுத்தி மேற்கூறப்பட்ட சமவாயத்தின் ஏற்பாடுகளை இலங்கையில் பயனுறுத்துவதற்குச் சட்ட ஏற்பாடு செய்வதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு அவசியமாகின்றது ஆதலாலும் ;*

*ஆதலால், இப்போது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக :—*

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் திகதியும்.*

*1. இச்சட்டம், 1999 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதல்களை ஒடுக்குவதற்கான சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அமைச்சரால், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளை மூலம், 1998 சனவரி 12 ஆம் திகதியன்று நியூயோர்க்கில் கையொப்பமிடப்பட்ட, பயங்கரவாதிகளின் குண்டுத்தாக்குதல்களை ஒடுக்குவதற்கான சமவாயம் (இது இதனகத்துப்பின்னர் "சமவாயம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) வலுவுக்குவரும் திகதியாக அத்தாட்சிப்படுத்தும் அத்தகைய திகதியன்று இலங்கை தொடர்பில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.*

*சமவாய அரசுகள்.*

***2***. *அமைச்சர், காலத்துக்குக்காலம், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் சமவாயத்திற்கான திறத்தவர்களான அரசுகளை அத்தாட்சிப்படுத்தலாம். இப்பிரிவின்கீழ் எந்த அரசு தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்படுகின்றதோ அந்த அரசு இதனகத்துப்பின்னர் "சமவாய அரசு" எனக் குறிப்பீடு செய்யப்படும்.*

*பயங்கரவாத குண்டுத்தாக்குதல் என்னும் தவறு.*

***3***. *(1) பொதுமக்களின் பயன்பாட்டுக்கான ஓரிடத்தில், ஓர் அரச அல்லது அரசாங்க வசதிக்கூடத்தில், ஒரு பகிரங்க போக்குவரத்து முறைமையில் அல்லது உள்ளகக் கட்டமைப்பு வசதிக் கூடமொன்றில், அதனுள் அல்லது அதற்கெதிராக :—*

*(அ) இறப்பை அல்லது பாரதூரமான உடல் ஊறை ஏற்படுத்தும் ; அல்லது*

*(ஆ) அத்தகைய இடத்திற்கு, வசதிக்கூடத்திற்கு அல்லது முறைமைக்கு பரந்தளவிலான அழிவை, அத்தகைய அழிவின் விளைவாக பாரிய பொருளாதார இழப்பு ஏற்படுமிடத்து அல்லது ஏற்படும் சாத்தியமுள்ள விடத்து அதனை ஏற்படுத்தும்,*

*முன்னத்துடன் வெடிபொருளொன்றை அல்லது உயிர்ச் சேதம் ஏற்படுத்தும் கருவியொன்றை சட்டவிரோதமாகவும் வேண்டுமெனவும் அனுப்பிவைக்கின்ற, இட்டுவைக்கின்ற, வெடிதீர்க்கின்ற அல்லது பொறியிடுகின்ற எவரேனும் ஆள் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் மேல்நீதிமன்றத்தால் குற்றப்பகர் வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக் கப்படுவதன்மேல் பதினைந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானதொரு காலப்பகுதிக்கு மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.*

*(2) (அ) ஓராம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிய எத்தனிக்கின்ற ;*

*(ஆ) ஓராம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிவதில் உதவுகின்ற அல்லது உடந்தையாயிருக்கின்ற ; அல்லது*

(இ) ஓராம் உட்பிரிவின்கீழ் தவறொன்றைப் புரிவதற்கு வேறோர் ஆளுடன் அல்லது ஆட்களின் குழுவொன்றுடன் சூழ்ச்சிசெய்கின்ற,

ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், மேல்நீதிமன்றத்தால் குற்றப்பகர்வின் மீதான விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது ஓராம் உட்பிரிவின்கீழ் தவறொன்றுக்கு விதித்துரைக்கப்பட்டவாறான அதே தண்டனைக்கு ஆளாதலும் வேண்டும்.

இப்பிரிவில் "உடந்தையாயிருத்தல்" என்பது தண்டனைச் சட்டக் கோவையின் 100 ஆம்101 ஆம் பிரிவுகளில் உள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(3) பின்வரும் எவையேனும் விடயங்களில் அதாவது –

(அ) தவறைப் புரிந்துள்ளதாக சார்த்துரை செய்ப்பபட்ட ஆள் இலங்கைப் பிரசையொருவராக அல்லது தமது வழமையான வதிவிடத்தை இலங்கையில் கொண்டுள்ள நாடற்ற ஆளொருவராக இருக்குமிடத்து ;

(ஆ) தவறு இலங்கைப் பிரசையொருவருக்கெதிராக புரியப்படுமிடத்து;

(இ) தவறு வேறு ஏதேனும் நாட்டிலுள்ள இலங்கை அரசாங்கத்தின் ஒரு தூதரகத்துக்கு தூதராண்மை அல்லது காவற்றூது வளவுக்கு அல்லது வேறு ஆதனத்துக்கு எதிராகப் புரியப்படுமிடத்து;

(ஈ) தவறு, ஏதேனும் செயலைச் செய்யுமாறு அல்லது செய்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தை நிர்ப்பந்திக்கும் முன்னத்துடன் புரியப்படுமிடத்து;

(உ) தவறு இலங்கை அரசாங்கத்தால் தொழிற்படுத்தப் படும் வானூர்தி ஒன்றில் புரியப்படுமிடத்து;

இலங்கை ஆட்புலத்திற்கு வெளியேயுள்ள ஏதேனுமிடத்தில் புரியப்பட்ட தவறொன்றை (1) ஆம் உட்பிரிவின்கீழ் அல்லது (2) ஆம் உட்பிரிவின்கீழ் விளங்குவதற்கு மேல்நீதிமன்றம் நியாயாதிக்கம் கொண்டிருத்தல் வேண்டும்.

*மேல்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம்.*

**4**. இச்சட்டத்தின் கீழான தவறுகளை விளங்குவதற்கு மேல் நீதிமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்ட நியாயாதிக்கம் கொழும்பில் நடாத்தப்பெறும் இலங்கை மேல்நீதிமன்றத்தால் அல்லது அரசியலமைப்பின் 154 ஒ என்னும் உறுப்புரையால் மேல் மாகாணத்திற்கென தாபிக்கப்பட்ட மேல்நீதிமன்றத்தால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

*இச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்படும் குறித்த சில ஆட்களின் உரிமைகள்.*

**5**. இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்காக இலங்கைப் பிரசையொருவராக அல்லாத ஆளொருவர் கைது செய்யப்படுமிடத்து, அத்தகைய ஆள் –

(அ) அவர் எந்த அரசின் நாட்டினத்தவரொருவராக இருக்கின்றாரோ அல்லது வேறுவகையில் அவரது உரிமைகளைப் பாதுகாப்பதற்கு உரித்துடையதாக இருக்கின்றதோ அந்த அரசின் தோதான பிரதிநிதியுடன் அல்லது அவர் நாடற்ற ஆளொருவராக இருக்குமிடத்து, எந்த அரசின் ஆள்புலத்தில் அவர் வழமையாக வதிபவராக இருந்தாரோ அந்த அரசின் அருகிலுள்ள தோதான பிரதிநிதியுடன் தாமதமின்றி தொடர்புகொள்வதற்கு;

(ஆ) அந்த அரசின் பிரதிநிதியொருவரால் சந்திக்கப்படுவதற்கு; அத்துடன்

(இ) பந்திகள் (அ) மற்றும் (ஆ) என்பவற்றின் கீழ் அவரது உரிமைகள்பற்றி அறிவிக்கப்படுவதற்கு, உரித்துடையவராதல் வேண்டும்.

*எந்த ஆட்கள் நாடு கடத்தப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப் படுகின்றதோ அந்த ஆட்களுக்கெதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி அமைச்சர் வேண்டுகோள் விடுக்கும் நாட்டிற்கு அறிவித்தல்.*

**6**. இச்சட்டத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளை நாடுகடத்துவதற்காக சமவாய நாடொன்றின் அரசாங்கத்தினால் அல்லது அதன் சார்பில் இலங்கை அரசாங்கத்துக்கு வேண்டுகோளொன்று விடுக்கப்படுமிடத்து, அமைச்சர், இலங்கை அரசாங்கத்தின் சார்பில், அத்தவறுக்காக அவ்வாளுக்கெதிராக குற்றவழக்குத் தொடுப்பதற்கு அல்லது அவ்வாளை நாடுகடத்துவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்துள்ள அல்லது எடுக்க உத்தேசிக்கும் நடவடிக்கைகள்பற்றி வேண்டுகோள் விடுக்கும் அரசின் அரசாங்கத்திற்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

*சமவாய அரசுகளுடன் உளதாம் நாடுகடத்தும் ஒழுங்குகள் அட்டவணையிலுள்ள தவறுகளுக்கு ஏற்பாடு செய்வதாகக் கருதப்படுதல்.*

**7.** இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் சமவாய அரசுடன் செய்துகொள்ளப்பட்ட நாடுகடத்துதல் ஒழுங்கொன்று இச்சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியன்று வலுவிலிருக்குமிடத்து, அத்தகைய ஒழுங்கு, 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நாடுகடத்துதல் சட்டத்தின் நோக்கங்களுக்கு, இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் நாடுகடத்துவதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*அமைச்சர், சமவாயத்தை அட்டவணையிலுள்ள தவறுகள் தொடர்பில் இலங்கைக்கும் குறித்தசில சமவாய அரசுகளுக்குமிடையிலான நாடுகடத்துதல் ஒழுங்கொன்றாகக் கொள்ளலாம் என்பது.*

**8.** இலங்கை அரசாங்கத்தினால் ஏதேனும் சமவாய அரசுடன் நாடுகடத்தும் ஒழுங்கெதுவும் செய்துகொள்ளப்பட்டிராதவிடத்து, அமைச்சர், வர்த்தமானியால் வெளியிடப்படும் கட்டளைமூலம், 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நாடு கடத்தும் சட்டத்தின் நோக்கத்திற்காக, சமவாயத்தை, இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித் துரைக்கப்பட்ட தவறுகள் தொடர்பில் நாடுகடத்துவதற்கு ஏற்பாடு செய்து அச்சமவாய அரசுடன் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட நாடுகடத்துதல் ஒழுங்கொன்றாகக் கொள்ளலாம்.

*1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க நாடு கடத்துதல் சட்டத்தைத் திருத்துதல்.*

**9.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தேழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க நாடுகடத்துதல் சட்டம், அச்சட்டத்திற்கான அட்டவணையில் அவ்வட்டவணையின் பாகம் ஆ என்பதற்கு உடன்முன்னராக பின்வரும் விடயத்தைப் புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"41. பயங்கரவாத குண்டுத்தாக்குதலை ஒடுக்குதல் மீதான சமவாயத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் வெடிபொருளை அல்லது உயிர்ச்சேதம் ஏற்படுத்தும் கருவியை பொதுமக்களின் பயன்பாட்டுக்கான ஓரிடத்தில் அல்லது அரச அல்லது அரசாங்க வசதிக்கூடத்தில் அல்லது ஒரு பகிரங்க போக்குவரத்து முறைமையில் அல்லது உள்ளகக் கட்டமைப்பு வசதிக்கூடமொன்றில், அதனுள் அல்லது அதற்கெதிராத

(அ) இறப்பையோ அல்லது பாரதூரமான உடல் ஊறையோ ஏற்படுத்தும் ;

(ஆ) அத்தகைய இடத்திற்கு, வசதிக்கூடத்திற்கு அல்லது முறைமைக்கு பரந்தளவிலான அழிவை, அத்தகைய அழிவின் விளைவாக பாரிய பொருளாதார இழப்பு ஏற்படுமிடத்து அல்லது ஏற்படும் சாத்தியமுள்ளவிடத்து, அதனை ஏற்படுத்தும்.

முன்னத்துடன் சட்டவிரோதமாகவும் வேண்டுமெனவும் அனுப்பிவைத்தல், இட்டுவைத்தல், வெடிதீர்த்தல் அல்லது பொறியிடுதல்."

*இச்சட்டத்தின் கீழான தவறுகள், நாடுகடத்தும் சட்டத்தின் நோக்கங்களுக்காக அரசியற்தவறுகள் முதலியனவல்ல எனக் கருதப்படுதல்.*

**10.** ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்து எழாம் ஆண்டின் 8 ஆம் இலக்க நாடு கடத்தல் சட்டத்தில் எது எவ்வாறிருப்பினும், அச்சட்டத்திற்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதிலும் இச்சட்டத்திற்கான அட்டவணையிலும் குறித்துரைக்கப்பட்ட தவறொன்று, ஏதேனும் அத்தகைய தவறுக்குக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றத் தீர்ப்பளிக்கப்பட்ட எவரேனும் ஆளை நாடுகடத்தும் அல்லது 11 ஆம் பிரிவின் கீழ் சமவாய அரசொன்றுக்கு உதவியளிக்கும் நோக்கங்களுக்கு மாத்திரம், அரசியல் இயல்புடைய தவறொன்றாக அல்லது அரசியல் தவறொன்றுடன் தொடர்புடைய தவறொன்றாக அல்லது அரசியல் நோக்கங்களினால் தூண்டப்பட்ட தவறொன்றாக இல்லாதிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சமவாய அரசுகளுக்கு உதவி.*

**11.** இலங்கை அரசாங்கத்திற்கும் சமவாய அரசொன்றுக்குமிடையில் அப்பயன்பட உடன்படிக்கையொன்று அல்லது வேறு ஒழுங்கு இருக்குமிடத்து, இலங்கை அரசாங்கம் சாட்சியத்தையும் வாக்குமூலங்களையும் எடுத்தல் அத்துடன் மன்றாணை சேர்ப்பித்தல் என்பன தொடர்பான உதவி உட்பட, 3 ஆம் பிரிவின் கீழான தவறொன்றை அல்லது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றைப் புலனாய்வு செய்வதற்கும் குற்ற வழக்குத் தொடுப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா உதவியையும் சமவாய அரசொன்றுக்கு வழங்குதல் வேண்டும் என்பதுடன், அமைச்சர் ஊடாக அத்தகைய எல்லா உதவிகளையும் கோரலாம்.

*அரசாங்கம் தவறுகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.*

**12.** இலங்கை அரசாங்கம் இச்சட்டத்தின் கீழான தவறொன்றை அல்லது இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தவறொன்றை இலங்கையிலாயினும் அல்லது இலங்கைக்கு வெளியேயாயினுஞ் சரி புரிவதிலிருந்து அல்லது அதனைப் புரிவதற்கு ஊக்கமளிப்பதிலிருந்து, தூண்டுவதிலிருந்து அல்லது ஒழுங்கு செய்வதிலிருந்து அல்லது அறிந்து நிதியுதவியளிப்பதிலிருந்து ஆளெவரையும் அல்லது ஆட்களின் குழுக்களைத் தடுப்பதற்குத் தோதான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**13.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**14.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலன்றி – பொருள் கோடல்

"வெடி பொருள் அல்லது உயிரிச் சேதம் ஏற்படுத்துகின்ற வேறு கருவி" என்பது –

(அ) மரணத்தை, பாரதூரமான உடல் ஊறை அல்லது கணிசமான பொருட்சேதத்தை விளைவிப் பதற்கென வடிவமைக்கப்பட்ட அல்லது அதற்கான ஆற்றலுடைய வெடிபொருள் அல்லது எரி ஆயுதம் அல்லது கருவி ; அல்லது

(ஆ) நச்சு இரசாயனங்கள், உயிரியற்காவிகள் அல்லது விடங்கள் அல்லது அதனையொத்த பதார்த்தங்கள் அல்லது கதிரியக்க அல்லது கிளர்மின் பொருட்களை வெளிவிடுதல், பரப்புவதன் ஊடாக அல்லது அவற்றின் தாக்கத்தின் ஊடாக இறப்பை, பாராதூரமான உடல் ஊறை அல்லது கணிசமான பொருட் சேதத்தை ஏற்படுத்து வதற்கென வடிவமைக்கப்பட்ட அல்லது ஏற்படுத்தும் ஆற்றலுடைய ஓர் ஆயுதம் அல்லது கருவி,

என்று பொருள்படும் ;

"உள்ளகக் கட்டமைப்பு வசதி" என்பது பொது மக்களின் நன்மைக்காக நீர், வடிகால், சக்தி எரிபொருள் அல்லது தகவல் தொடர்பு போன்ற சேவைகளை வழங்கும் அல்லது பகிர்ந்தளிக்கும் பகிரங்க அல்லது தனிப்பட்ட முறையில் சொந்தமாக வைத்திருக்கப்படும் ஏதேனும் வசதி என்று பொருள்படும் ;

"பொதுமக்களின் பயன்பாட்டுக்கான இடம்" என்பது, தொடர்ச்சியாகவாயினுஞ்சரி, காலத்துக்குக்கால மாயினுஞ்சரி, இடைக்கிடையாயினுஞ்சரி, பொது மக்கள் அணுகக்கூடிய அல்லது அவர்களுக்குத் திறந்திருக்கப்படும் ஏதேனும் கட்டிடத்தின், காணியில் தெருவின் நீர் வழியின் அல்லது வேறு அமைவிடத்தின் அத்தகைய பாகம் என்று பொருள்படும் என்பதுடன் அவ்வாறு பொது மக்கள் அணுகக் கூடிய அல்லது அவர்களுக்குத் திறந்திருக்கக்கூடிய வர்த்தக, தொழில், பண்பாட்டு, வரலாற்று, கல்வி, சமய, அரசாங்க களியாட்ட, பொழுது போக்குக்குரிய அல்லது இதனையொத்த இடம் எதனையும் உள்ளடக்கும் ;

"பகிரங்கப் போக்குவரத்து முறைமை" என்பது பகிரங்க அடிப்படையில் சொந்தமாகக் கொண்டிருக்கப் படினுஞ்சரி, தனிப்பட்ட முறையில் சொந்தமாகக் கொண்டிருக்கப்படினுஞ்சரி, ஆட்களை அல்லது பொருட்களை ஏற்றிச் செல்வதில் அல்லது செல்வதற்கெனப் பயன்படுத்தப்படுகின்ற எல்லா வசதிகளும் வாகனங்களும் சாதனங்களும் என்று பொருள்படும் ;

"அரச அல்லது அரசாங்க வசதி" என்பது அரசொன்றின் பிரதிநிதிகளால், அரசாங்கத்தின், சட்டசபையின் அல்லது நீதித்துறையின் உறுப்பினர்களால் அல்லது அரசின் அல்லது வேறு ஏதேனும் பகிரங்க அதிகாரசபையின் அல்லது அமைப்பின் அலுவலர்களால் அல்லது ஊழியர்களால் அல்லது அரசாங்கங்களுக்கிடையிலான ஒழுங்கமைப் பொன்றின் ஊழிர்களால் அல்லது அலுவலர்களால் அவர்களது அலுவலக முறையிலான கடமைகள் தொடர்பில் பயன்படுத்தப்படும் அல்லது இருப்பாட்சி கொள்ளப்படும் ஏதேனும் நிரந்தரமான அல்லது தற்காலிக வசதியை அல்லது வாகனத்தை உள்ளடக்கும்.

## அட்டவணை *(பிரிவுகள் 6,7,8,10)*

1. ஏதேனும் வெடிபொருளை அல்லது உயிர்ச்சேதம் ஏற்படுத்தும் கருவியை பொதுமக்களின் பயன்பாட்டிற்கான ஓரிடத்தில் அல்லது அரச அல்லது அரசாங்க வசதிக் கூடத்தில் அல்லது ஒரு பகிரங்கப் போக்குவரத்து முறைமையில் அல்லது உள்ளகக் கட்டமைப்பு வசதிக்கூடமொன்றில் அதனுள் அல்லது அதற்கெதிராக

(அ) இறப்பையோ அல்லது பாரதூரமான உடல் ஊறை ஏற்படுத்தும் ;

(ஆ) அத்தகைய இடத்திற்கு, வசதிக்கூடத்திற்கு அல்லது முறைமைக்கு பரந்தளவிலான அழிவை அத்தகைய அழிவின் விளைவாக பாரிய பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் சாத்தியமுள்ளவிடத்து. அதனை ஏற்படுத்தும்.

முன்னத்துடன் சட்டவிரோதமாகவும் வேண்டுமெனவும் அனுப்பி வைத்தல் இட்டு வைத்தல், வெடி தீர்த்தல் அல்லது பொறியிடுதல்,

2. ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றைப் புரிய எத்தனித்தல்.

3. ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றைப் புரிய உதவி அல்லது ஒத்தாசை செய்தல்.

4. ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட தவறொன்றைப் புரிவதற்கு வேறோர் ஆளுடன் அல்லது ஆட்களின் குழுவுடன் சூழ்ச்சி செய்தல்.

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387: (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர். அரசாங்க வெளியீட்டலுவலகம் இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.*